REGD. NO: M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 16௳ வெள்ளி (1—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 17௳ சனி (2—11—57) [இதழ் 120

நாசர் ஆட்சியைக் கவிழ்க்க சதி?

★

கெய்ரோ, அக். 31—

இன்று எகிப்திய இராணுவ நீதிமன்றம் ஒன்று, பதின்மூன்று கம்யூனிஸ்டுகளுக்கு மூன்று முதல் ஏழாண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது.

இவர்கள், நாசர் தலைமையில் உள்ள சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

சர்க்கார் போக்கைக் கண்டித்து

தி. மு. க. வெளிநடப்பு

அண்ணா தந்த விளக்கம்

சென்னை, நவ. 1—

நான்கு நாட்களாக சென்னை சட்டசபையில் நடைபெற்று வந்த 'நம்பிக்கையில்லாத் தீர்மான' விவாதத்தின் இறுதிக் கட்டத்தில், ஓட்டெடுப்பு நடைபெறுவதற்கு முன்பு தி. மு. கழக உறுப்பினர்கள் அண்ணா தலைமையில், சர்க்கார் போக்கைக் கண்டித்து சட்ட மன்றத்தை விட்டு வெளியேறினர்.

சர்க்கார் தரப்பில், நிதி அமைச்சர் பதிலளித்தானதும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஓட்டெடுப்பு ஆரம்பமாக இருந்தது.

பரபரப்பான அந்தக் கட்டத்தில், அண்ணா அவர்கள் எழுந்திருந்து, சட்ட மன்றத்தில் ஒரு நிலைமை விளக்க அறிவிப்புச் கூறினார்கள்.

"சட்ட மன்றத் தலைவர் அவர்களே! ஒரு விளக்கவுரை தர விரும்புகிறேன்.

"இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே என் கட்சி கலந்து உரை ஆற்றியபோது, இராமநாதபுரம் மாவட்டத்திலே நேரிட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் குறித்து, ஒரு நீதி விசாரணை ஏற்பாடு செய்ய இந்தச் சர்க்கார் இணங்க மறுக்கும் போக்கை முக்கியமாகக் கவனித்தே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தி. மு. கழகம் ஆதரிக்கிறது என்பதை நான் தெளிவு படுத்தி இருக்கிறேன்.

"ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்தவர், முன்பும் கூறினார்—மீண்டும்—இப்போதும் வலியுறுத்திக் கூறுகிறார் — 'இந்த(இராமநாதபுரம்)ச்சம்பவங்கள் அவ்வளவுக்கும்; காரணமாகவும், தூண்டியவர்களாகவும் உள்ளவர்கள் முதலமைச்சர் காமராசரும், போலீஸ் அமைச்சர் பக்தவத்சலமும்தான்' என்று!

"நாங்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதாயில்லை.

"எங்கள் அதிருப்தி அவ்வளவும், நீதி விசாரணை ஏற்பாடு செய்ய இந்தச் சர்க்கார் இணங்க மறுக்கிறதே என்பதின் பேரில்தான், முக்கியமாக.

"அலுவல் முறை அமைப்புக் குழுவில், எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி, 'நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தத் தேவையில்லை (விவாதித்தாலே போதும்)' என்று முடிவு செய்திருந்தோம்.

"இந்த முடிவுக்கு நான் ஒப்பம் அளித்திருந்தேன்.

"இந்தச் சமயத்தில், அந்த ஏற்பாட்டு முறை குலைவது கண்டு, நான் வெளிப்படையாக என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இப்போது ஏற்பட்டுவிட்ட நிலைமை என்னவென்றால், தி. மு. கழகம் எந்தப் பிரச்சினை வலியுறுத்தப்படத் தேவையில்லை என்று கருதுகிறதோ, அதனையே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் வலியுறுத்துகிறார்.

"எனவே, (அவருடைய நோக்கப்படி) அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஓட்டு அளிப்பதில் பொருள் இல்லை.

"அதேபோது, நீதி விசாரணை வேண்டுமென்ற நியாயமான எங்கள் வேண்டுகோளை, இந்தச் சர்க்கார் ஏற்க மறுத்திருப்பதால், சர்க்காரின் இந்தப் போக்கை நாங்கள் கண்டிக்கிறோம்; அந்தக் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், நீதி விசாரணை ஏற்பாட்டுக்கு இணங்க மறுக்கும் சர்க்காரின் பிடிவாதப் போக்கைக் கண்டிக்கிறோம் என்பதைக்காட்ட, நான், எனது கட்சி உறுப்பினர்களுடன் சட்ட மன்றத்தை விட்டு வெளியேறுகிறேன்."

உடனே, அண்ணாவும், தி. மு. கழகச் சட்டசபை உறுப்பினர்களும் சட்டசபையை விட்டு வெளியேறினர்.

★★★★★★★★★★★★★★★★★★

அறிவிப்பு

சென்னை, நவ. 1—

சென்னை சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள், கடந்த 30—10—57 அன்று ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் ஆங்கில ஏட்டிலிருந்து மொழி பெயர்த்து நேற்று வெளியிட்டிருந்தோம். அண்ணா அவர்களது சொற்பொழிவின் முழு விபரமும் — சட்டசபையில் ஆற்றியபடி—பின்னர் வெளிவரும்.

—ஆசிரியர்

★★★★★★★★★★★★★★★★★★

கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம்

நிறுவுவோருக்கு சர்க்கார் உதவி செய்யுமாம்

சட்டசபையில் கேள்வி-பதில்

சென்னை, அக். 31—

'கட்டபொம்மன் பிறந்த இடத்திலோ அல்லது அவர் வாழ்க்கையுடன் தொடர்புகொண்ட வேறு இடத்திலோ நினைவுச் சின்னம் வைக்க முன்வருபவருக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்கும்' என்று நிதி அமைச்சர், சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

"சுதந்திர நூற்றாண்டு விழா சம்பந்தமாக நான்கு வீரர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்பட்டது; பாபநாசம் பகுதியில் வ. வே. சு. அய்யர் நினைவு மண்டபத்திற்கு ரூ. 6,000 செலவிடப்பட்டது; ஒட்டப்பிடாரத்தில் வ. உ. சிதம்பரம் குடியிருந்த இல்லத்தை ரூ. 5,000 கொடுத்து வாங்கப்பட்டது; திருப்பூர் புகைவண்டி நிலையத்தின் அருகில் ரூ. 9,040 செலவில் குமரன் நினைவுச் சின்னம் கட்டப்பட்டுள்ளது; சென்னை செம்பியத்தில் தமிழ்க்கடல் திரு. வி. க.-விற்கு ரூ. 5,000 செலவில் நினைவுச் சின்னம் வைக்கப்பட்டுள்ளது" என்று மந்திரி தெரிவித்தார்.

"திருப்பூர் குமரன் நினைவுச் சின்னமாக குமரனின் உருவத்திற்கு மாறுக வேறொன்று வைக்கப்பட்டுள்ளதை அரசாங்கம் அறியுமா?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் எ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டார்.

அந்தச் சின்னத்தில் குமரன் உருவம் இல்லாதது உண்மை என்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டு, உள்ள சின்னத்திற்குப் புதிய விளக்கம் தந்தார்!

"'சுதந்தர இந்தியா'வுக்குச் சட்டம் தீட்டித்தந்த தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரான அம்பேத்காருக்கு சிலை வைக்கும் நோக்கம் உண்டா?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் சந்தானம் கேட்டார்.

'சட்டத்தை சரிவர அமுல் நடத்துவதே அவருக்கு நினைவுச் சின்னமாகும்' என்று அமைச்சர் பதிலளித்தார்.

"வ. உ. சி., திரு. வி. க. முதலியவர்களுக்குச் சிலை வைக்கத் திட்டமிட்ட அரசாங்கம் கட்டபொம்மனுக்குச் சிலை வைக்க ஏன் திட்டம் தீட்டவில்லை?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"1857-ல் வேலூரில் நடைபெற்ற போராட்டத்தில், வேலூரில் உயிர் நீத்த படையினர் நினைவாக ஏதேனும் செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?"

என்று நமது கழக உறுப்பினர் திரு. எம். பி. சாரதி கேட்டார்.

இவற்றிற்கு, 'இப்போது இல்லை' என்று அமைச்சர் பதிலளித்தார்.

அமைச்சரவைமீது நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

ஆதரவாக 27 - எதிராக 146 வாக்குகள் பதிவு

சென்னை, அக். 31—

'காமராசர் தலைமையில் உள்ள அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லை' என்று சட்டசபையில் கொண்டுவரப்பட்டு கடந்த நான்கு நாட்களாக விவாதிக்கப்பட்ட தீர்மானம் இன்று தோற்றது.

கேள்விநேரத்திற்குப் பிறகு. தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது, சர்க்கார் மீது எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு சர்க்கார் கட்சித் தலைவர் என்ற முறையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் பதிலளித்தார்.

பின்னர் தீர்மானத்தை முன்மொழிந்த தோழர் கல்யாணசுந்தரம் தனது தீர்மானத்திற்கு ஆதரவாகவும், மந்திரியினுடையவும் இதாருடையவும் வாதங்களை மறுத்தும் பேசினார்.

இறுதியாக நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளித்தார்.

அந்தச் சமயத்தில்தான், சம்பவங்கள் பற்றிய நீதிமன்ற பூர்வ விசாரணை வேண்டும் என்ற நமது கோரிக்கையை ஏற்க சர்க்கார் பிடிவாதமாக மறுப்பதால், சபையிலிருந்து வெளியேறுவதாக நிலை விளக்கம் தந்துவிட்டு அண்ணா அவர்களின் தலைமையில் நமது கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது; தீர்மானத்திற்கு ஆதரவாக 27 வாக்குகளும், எதிராகச் 146 வாக்குகளும் கிடைத்திருப்பதாக டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் அறிவித்தார். தீர்மானம் தோற்றதாக அறிவிக்கப்பட்டது.

இணைப்புக் கல்லூரி ஆசிரியர் நிலை

அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் மழுப்பல்

சென்னை, அக். 31—

இணைப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தும் நோக்கம் சென்னை அரசாங்கத்திற்கு உண்டு என்றும், ஆனால் இப்போது போதிய நிதி வசதி இல்லை என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

"5 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் அறிவித்த ஊதிய உயர்வு இன்னும் அமுல் செய்யப்படாதது அரசாங்கத்திற்கு தெரியுமா? ஏதேனும் செய்யும் நோக்கம் உண்டா? அதிலும், தமிழ் ஆசிரியர்களுக்கு உள்ள குறைமதிப்பைப் போக்கும் எண்ணம் உண்டா?

என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"எல்லா நல்ல காரியங்களும் செய்யப்படும்" என்று, இதற்கு மந்திரி பதிலளித்தார்.

'தவிடு ஏற்றுமதி கூடாது'

டெல்லிக்கு சென்னை வேண்டுகோள்

சென்னை, அக். 31—

சென்னை மாநிலத்தில் 1957—58-ம் ஆண்டில் மொத்தம் 105 டன் தவிடு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாம்.

இந்த மாநிலத்திலுள்ள கால்நடைகள் வளர்ச்சிக்காக தவிடு தேவைப்படுவதை டெல்லிக்குச் சுட்டிக் காட்டி, ஏற்றுமதிகூடாது என்று சென்னை அரசாங்கம் கூறியுள்ளதாக உள்நாட்டு அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

மாநில நெசவு ஆலைகளில் நூற்புக் கதிர்கள்

'எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் யாரிடத்தில்?'

கழக உறுப்பினர் கேள்விக்கு 'புகார் தேவையில்லை' எனப் பதில் தருகிறார் அமைச்சர்

சென்னை, அக். 31—

"1957-ம் ஆண்டில், நெசவு ஆலைகளில், மொத்தம் 28,624 நூற்புக் கதிர்களுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது" என்று தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் சட்டசபையில் தெரிவித்தார்.

கைத்தறியின் முன்னேற்றத்தைக் கருதியே இதை அரசாங்கம் செய்துள்ளதாம்!

'அகில இந்திய அடிப்படையில் தான் நூற்புக் கதிர்கள் மாநிலங்களுக்கு நிர்ணயிக்கப்படுகிறது' என்று நமது கழக உறுப்பினர் தோழர் எ. கோவிந்தசாமி கேட்டதற்கு அமைச்சர் தெரிவித்தார்.

"எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அடிப்படை உரிமை யாரிடம் உள்ளது. டில்லியிடமா, சென்னையிடமா?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"தேவையான அளவு கிடைக்கும்போது புகார் தேவையில்லை" என்றார் மந்திரி.

நம் நாடு

சென்னை 1—11—57 வெள்ளி

பர்மா தமிழர் அவதி

தமிழர்கள் குடியேறியுள்ள நாடுகள் அனைத்திலும், அந்தந்த நாடுகள் மேற்கொள்ளத் துணிந்துள்ள புதிய நடவடிக்கைகள் காரணமாக, தமிழ் மக்களுக்குத் தொல்லைகள் நேர்ந்துவருகின்றன. இவ்வகையில் தாங்கொணுத் தொல்லைகளுக்கு ஆளாகி இருப்பவர்கள் இலங்கைவாழ் இந்தியத் தமிழ் மரபினர் ஆவர்.

இந்தியப் பேரரசிற்கும் இலங்கை சிங்கள அரசிற்கும் எவ்வளவுதான் நட்புறவு இருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டபோதிலும், இலங்கையில் வாழ்ந்துவரும் இந்தியத் தமிழ் மரபினர்களுக்கு அந்த நட்புறவால் காதொடிந்த ஊசியளவு நற்பயனும் ஏற்படுவதாகக் காணேம். அதற்கு மாறாக, இருந்துவருவதாகச் சொல்லப்படும் அந்த நட்புறவே, இலங்கைவாழ் இந்தியத் தமிழ் மரபினரின் அல்லல்களைக் கூட்டுவதற்கும், அலட்சியப்படுத்தப் பட்டுவருவதற்கும், இலங்கை சிங்கள ஆட்சியினருக்கு பெருந்துணையாக இருந்துவருவதைக் காண்கிறேம்.

இலங்கை அரசுக்கும் இந்தியப் பேரரசிற்கும் இருந்துவருவதாகக் கூறப்படும் நட்புறவு, இரண்டு அரசுகளிலும் ஆதிக்கம் செலுத்திவரும் தனி நபர்களை முகத்துக்கு முன்னுல் ஒருவரை ஒருவர் பலப்பட புகழ்ந்து பாராட்டிக்கொள்ளப் பயன்படுகிறதே அல்லாது, இரண்டு நாட்டு மக்களுக்கும் இருதய பூர்வ நெருக்கமான தொடர்பை ஏற்படுத்துவதற்குத் துளியும் இதுவரை பயன்படவில்லை என்பது அனுபவ உண்மையாகும். எனவே, அரசாங்க நிலையில், இரண்டு அரசுகளுக்கும் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் நல்லுறவினுல், பெற்றுத் தீர வேண்டிய நற்பயனை இரண்டு நாட்டு மக்களும் அறவே பெற்றிருக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாக இருக்கும்பொழுது, அரசாங்க நிலையில் இரண்டு அரசுகளுக்கும் இடையில் இருந்துவரும் தொடர்பை நல்லுறவு எனக் கூறுவதும் பொருந்தாது. அது வெறும் மனமயக்கமேயாகும். அதை வெறும் அரசியல் நடிப்பு என்றுதான் கொள்ள முடியும்.

இலங்கைவாழ் இந்தியத்தமிழ் மரபினர்களுக்கு, இலங்கை சிங்கள ஆட்சி இயற்றிவரும் தொல்லைகளின் பட்டியல் கூடிக்கொண்டே போகிறது. அவர்களுக்காகப் பரிந்து பேசுவது தனது பொறுப்பு அல்ல என்று இந்தியப் பேரரசு கையை விரிக்க முனைந்துள்ளது. நிற்க,

இப்பொழுது பர்மாவாழ் இந்தியத் தமிழர்களுக்கு, பர்மா அரசினர் போக்கால் ஏற்பட்டு வரும் அல்லல் பற்றிச் செய்தி தரப்பட்டு இருக்கிறது. இவ்வகையில் இதுதான் துவக்கம போலும்!

ஜப்பான் சென்று திரும்புங்கால், பர்மாவில் தங்கினுர் இந்தியப் பிரதமர். அவரிடம் பர்மா இந்தியர் காங்கிரசு, பர்மா அரசினரால் தங்களுக்கு இயற்றப்பட்டுவரும் நெருக்கடிகளைக் குறிப்பிட்டு, உடனடியாக அவைகளைக் களைய பிரதமர் முன்வர வேண்டும் எனக் கோரியுள்ளனர். மனு உருவில் அவை பிரதமரிடம் தரப்பட்டு உள்ளன.

அந்த அளவுடனும் பர்மா இந்தியர் காங்கிரசு இருந்துவிடவில்லை. இப்பொழுது மனுவில் குறிப்பிட்டுள்ளது போக, பர்மா அரசினரால் பர்மாவாழ் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் வேறு பல இன்னல்களை ஒரு விரிவான மனு மூலம் பிரதமருக்கு அறிவிக்கப்போவதாகவும் பிரதமரிடம் நேரில் அறிவித்துள்ளது பர்மா இந்தியர் காங்கிரசு.

பர்மாவாழ் தமிழர்களில் 40,000 நபர்கள் பர்மா குடிமகனுகப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பித்துக் கொண்டனராம். அதில் 6,000 விண்ணப்பங்களைத்தான் பர்மா அரசாங்கம் ஆராய்ந்து உள்ளதாம். மற்ற விண்ணப்பங்களின் கதி இன்னும் தெளிவாகவில்லை.

பர்மாவில் வாழ்ந்து வரும் தமிழ்மக்களில் பெரும்பான்மையினர் பர்மா குடிமக்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்வதில் விருப்பமுடையவர்களாக இருக்கவில்லை. அவர்களுக்கு இருக்கின்ற விருப்பமெல்லாம், எப்படியாவது பர்மா அரசாங்கத்தின் குறுக்கீடில்லாது தங்களுடைய தொழிலை நடத்த வேண்டும் என்பதேயாகும். அதற்கான குறைந்தபட்ச பாதுகாப்பைத்தான் பர்மா அரசினரிடமிருந்து, பர்மாவாழ் இந்தியர்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வுண்மை, இந்தியப் பிரதமரிடம் பர்மா இந்தியர் காங்கிரசு அளித்துள்ள மனுவிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

பர்மாவாழ் தமிழர்களின் இச்சிறிய தேவையை நிறைவேற்றி வைக்கவும் பர்மா அரசு விரும்பவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

தமிழ் மக்கள் பர்மாவில் தங்கி இருப்பதற்காக பர்மா அரசாங்கம் விதித்துவரும் வரிகள் பெருகிக்கொண்டே போகிறது என்று இம்மனு அறிவிக்கிறது. அதாவது,பர்மாவில் வெளிநாட்டவர் தங்கி இருப்பதற்கென அமைக்கப்படும் அரசாங்கஅனுமதிக்கு ஏற்கனவே பத்து ரூபாய் வசூலிக்கப்பட்டுவந்தது. அத்தொகை இப்பொழுது ஐமபது ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதுபோன்றே, தங்கி இருப்பதற்காகப் பணஞ்செலுத்திப் பெற்றுள்ள அனுமதியை, ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக் கொள்ளுவதற்காகத் தமிழ் மக்கள் இருபத்தைந்து ரூபாய் செலுத்தி வந்தனர். இத்தொகையும் ரூபாய் ஐம்பதுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. இவ்வுயர்வும இன்றுமுதல் நடைமுறைக்கு வரப்போகிறது.

பர்மாவில் வாழும் தமிழ் மக்களில் பெரும எண்ணிக்கையினர் கூலிகளாகவும், உழவர்களாகவும், வேறு சிறு சிறு தொழிலில்ஈடுபட்டும் வாழ்க்கையைக் கடத்தி வருபவர்களாவர். இத்தகு ஏழ்மை நிலையில் காலங்கழித்து வருகிறவர்கள் பர்மாவில் தங்கி இருப்பதற்காகவென, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் நூறு அரசாங்கத்திற்குச் செலுத்துவது என்பது மிக மிகச் சங்கடமானது என்பது வெளிப்படை.

பர்மா குடிமகனுகப் பதிவு செய்துகொள்ளாத எந்த தமிழ் மகனும், பர்மா நிலச் சட்டப்படி, சொந்தத்தில் நிலம் வைத்திருக்கமுடியாது. பர்மா குடிமகனுகப் பதிவு செய்துகொள்வதும் எளிதானதல்ல. இந்த நிலையில், பல ஆண்டுக்காலமாக நிலம் சொந்தத்தில் கொண்டிருந்த தமிழ்மக்களும், குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள முடியாத காரணத்தால், சொந்த நிலத்தை வந்த விலைக்கு விற்றுவிட்டு வெளியேற வேண்டியவர்களாகின்றனர்.

தாயகத்தில் உள்ள தனது உற்றூர் உறவினர்களுக்கு கணிசமாகப் பணம் அனுப்புவது என்பதும் பர்மாவில் உள்ள தமிழ் மக்களால் முடிவதில்லை. அதற்கும் பர்மா அரசாங்கம் தடை விதித்திருக்கின்றது.

பர்மா அரசினருக்கும் இந்தியப் பேரரசினருக்கும் நல்லுறவு இருந்து வருவதாகப் பிரசாரம்செய்யப்படுகிறது. ஆனுல், பர்மாவாழ் தமிழர்கள் நிலையோ அப்பிரசாரத்தை மெய்ப்பிப்பதற்கு மாறுக அமைந்திருக்கின்றது.

‘நாட்டை மீட்கும் மகத்தான பணியே நமது நோக்கமாகும்’

‘அறிவுச் சுடர்கொளுத்தி அடிமைத் தளையறுப்போம்’

‘ஏழை-எளியவர் குடிசைகளைக் கொளுத்திச் சுதந்தரம் பெற எண்ணேம்’

‘சகிப்புத்தன்மையுடன் கடமையாற்ற முனைவீர்’

கொருக்குப்பேட்டையில் அண்ணு கொள்கை விளக்கம்

25—10—57-ல், சென்னை-கொருக்குப்பேட்டையில் நடந்த 5-வது வட்ட தி. மு. கழக—இளங்கோ படிப்பகத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது; முற்பகுதிகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன :—

“நமக்கு மிகமிக சகிப்புத்தன்மை வேண்டும். வளர்ந்திருக்கின்ற சக்தியைக் கட்டிக் காக்க திறமை பெற்றுகவேண்டும்.

“நமது நோக்கம் நமக்குப் புரிந்த அளவு மக்களுக்குப் புரிந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எனக்கும் பெரியாருக்கும்கூட இதில்தான் கருத்து வேற்றுமை இருந்துவந்தது. மக்கள், நாம் சொல்வதைப் பின்பற்றக்கூடிய அளவுக்கு நோக்கத்தைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும். பெரியார் அவர்கள் தனக்கும், தன்னைச் சேர்ந்த குழுவினருக்கும் எவ்வளவு தெரியுமோ அவ்வளவும் மக்களும் தெரிந்திருக்கிறார்கள்—தெரிந்திருக்க வேண்டும் என்ற தன்மையில்தான் எதையும் பேசுவார். மக்கள் புரிந்துகொண்டிருக்கிற அளவுக்குப் பிரச்சினையைத் தெளிவாக விளக்கவேண்டும் என்பதுதான் என் கருத்து.

“காங்கிரஸ்காரர்கள் நம் பிரச்சினையைப் புரிந்துகொள்ளாமலே நம்மைத் தாக்கிப் பேசினுல், அவர்கள் மீது கோபம் வருவதைவிட, என்னைப்பற்றி நானே வெட்கப்படுவேன். எவ்வளவு பன்னிப் பன்னிச் சொல்லியும், எவ்வளவு ஆதாரங்களை—விளக்கங்களை அழகாக எடுத்துரைத்தும், அவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு நாம் சொல்ல முடியவில்லையே; அதனுல்தான் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று கருதுவேன். எனவே, அவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு நாம் சகிப்புத்தன்மையோடு சொல்ல வேண்டும்.

“நம் கழகக்காரர்கள் மட்டுமின்றி, மற்றவர்களும் நாம் புரிந்திருக்கிற அளவு பிரச்சினையை புரிந்துகொள்ளும்படியாகச் சொல்லவேண்டும்.

“நாம் கொண்டிருக்கிற நோக்கம் சாமானியமானதல்ல; நாட்டை மீட்கும் ஒரு பெரிய பிரச்சினை.

“நாம் இதற்கு இரத்தம் சிந்தாமல், பலாத்காரத்தில் இறங்காமல், வியர்வையையும் கண்ணீரையும் மட்டுமே சிந்தி நாட்டைப் பெறவேண்டும். பர்மாவும், இந்தோனேஷியாவும் சுதந்தரம் பெற்றதுபோல் யாராவது ஆயுதம் கொடுப்பார்களா என்றே, நாகர் நாடு கோருபவர்களுக்கு எங்கிருந்தோ ஆயுதங்கள் கிடைக்கின்றன என்கிருர்களே, அதைப்போல கிடைக்குமா என்றே, கருதி அந்தவகையிலே நாம் இன்று இல்லை.

“அறிவுச்சுடரைக் கொளுத்தி சுதந்தரம் பெறவேண்டும்; ஏழை எளியவர்கள் குடிசைகளைக் கொளுத்தியல்ல!

“நமக்குச செல்வாக்கு வளர்ந்து இருக்கிறது என்று கருதி இருந்துவிட்டால் பயனில்லை. நமது நாட்டுப் பிரிவினைத் திட்டத்தில் எல்லா மக்களும் நாட்டம் செலுத்துகிருர்களா என்று பார்க்கவேண்டும். எல்லோரும் தி. மு. கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்படிச் செய்யவேண்டும்.

“நம் கொள்கை எதிர்வீட்டுக்காரருக்குப் புரிந்திருக்கிறதா, பக்கத்து வீட்டுக்காரருக்குப் புரிந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும். தொழிலாளியாக இருக்கும் கழகத் தோழர் தனது முதலாளிக்குப் புரிந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அண்ணன், தம்பிக்குப் புரியவைக்கவேண்டும். தொட்டுத் தாலிகட்டிய மனைவிக்கும், பெற்ற தாய்க்கும் புரியவைக்கவேண்டும்.

“என்னை ஒரு கொட்டடியிலும், ஈழத்தடிகளை ஒரு கொட்டடியிலும், அருணகிரி அடிகளை ஒரு கொட்டடியிலும், பெரியாரை பெல்லாரி சிறையிலும் அடைத்துவைத்திருந்தபோது, கனவாவது கண்டிருப்போமா—‘இதே ஆச்சாரியார் இப்படி இந்தியை நம்முடன் சேர்ந்து எதிர்ப்பார்’—என்று? அல்லது அவர்தான் எண்ணியிருப்பாரா? மும்முனைப் போராட்டத்தின் போது இதே ஆச்சாரியார்தான், ‘ஈ, எறும்புபோல இவர்களை நசுக்கிவிடுவேன்’ என்று கூறினுர்; ‘இவர்கள் இயக்கத்தைப் பழங்கதையில் சேருமாறு செய்து விடுவேன்’ என்ருர். அப்படிப் பேசியவர்தான், அண்மையில் மயிலாப்பூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், 1990 வரை இந்தித் திணிப்பை ஒத்திவைக்க வேண்டும் என்னும் சுப்பராயனின் கோரிக்கையைப் பிய்த்தெறிந்து இருக்கிருர். அவருடைய பேச்சு முழுவதையும் நீங்கள் பத்திரிகையில் படித்திருக்க முடிந்திருக்காது. நான், நண்பர் ஒருவர் மூலம் அவரது அந்தப் பேச்சை ‘டேப் ரிக்கார்டு’ செய்து வரச் செய்து கேட்டேன். அவர் தன் பேச்சில், “இந்தித் திணிப்பை ஒத்திவைக்க வேண்டும் என்று சுப்பராயன் போன்றவர்கள் சொல்லுவது முறையல்ல; உதாரணமாக, ஒரு கிழவி, ‘என்னைக் கல்யாணம் செய்து கொள்’ என்று ஒரு வாலிபனிடம் வந்து கேட்டால், ‘இப்பொழுது வேண்டாம்; இன்னும் 10 ஆண்டு கழித்துப் பார்த்துக் கொள்ளலாம்’ என்று வாலிபன் பதில் கூறுவதுபோல இருக்கிறது இந்தக் கோரிக்கை” என்று பேசியிருக்கிருர்.

“எந்த ஆச்சாரியார், ‘தமிழ்—இட்டிலி; இந்தி-சட்டினி’ என்று சொன்னரோ, ‘சட்டினி காரமாக இருக்கிறது’ என்று நாம் கூறிய போது, ‘என்னை எதிர்த்தா பேசுகிறீர்கள்? இதோ, 4 மாதம் சிறை’ என்று எந்த ஆச்சாரியார் சொன்னரோ, அதே ஆச்சாரியார்தான், ‘இன்னும் 10 ஆண்டுக்குப்பின் படுகிழமாகி இந்தியை ஏற்கலாமா?’ என்கிருர். என் வாழ்நாளில், ‘இந்தியை அவர் எதிர்ப்பார்; காதுகுளிரக் கேட்கலாம்’ என்று எதிர்பார்க்கவே இல்லை.

“இந்த அளவு வந்த அவர், ஏன் திராவிட நாடு கேட்பதிலும் நம்முடன் சேரமாட்டார்? அவர் அன்றையப் பேச்சில், தென்னுட்டைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம், ‘நாகபுரிக்குத் தெற்கே உள்ள பிரதேசம்’ என்றே குறிப்பிட்டுக்கொண்டு வருகிருர்; இதன் அர்த்தமென்ன? ‘திராவிடநாடு’ என்று பச்சையாகச் சொல்லக் கூச்சப்பட்டுக் கொண்டுதான் அப்படிச் சொல்லியிருக்கிருர். இறுதியில் ஒரு இடத்தில் வந்து, ‘Dravidian Country’ என்றும் சொல்லிவிட்டார். வசிஷ்டர் வாயால் ‘பிரம்மரிஷி’ பட்டம் விசுவாமித்திரனுக்குக் கிடைத்ததுபோல, ஆச்சாரியார் வாயால், ‘இந்தி இப்பொழுது மட்டுமல்ல; எப்போதுமே வேண்டாம்; அது உத்தியோக மொழியானுல் தமிழர் உருப்படவே முடியாது; திராவிடர்களுக்கு அது வேண்டாம்’ என்று பேசுவார் என யார் எதிர்பார்த்தார்கள்?

“நமக்கும் அவருக்கும் அதிக உறவு கிடையாது. ஒரே ஒருநாள் அவரைச் சந்தித்தேன்; அவ்வளவுதான். நான் சந்தித்ததும், பெரியார்கூட ஏதேதோ சந்தேகப்பட்டார். புராணத்திலே, ‘ரிஷிப்பிண்டம் ராத்தங்காது’ என்பார்களே, அதைப்போல, நானும் அவரும் சந்தித்த உடனே அவர், ‘திராவிடத்தைக் காப்போம்’ என்று எழுதிவிட்டார். அடுத்து, ‘இந்தி கூடாது’ என்று பேசுகிருர். ‘காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது’ என்பார்களே, அதைப்போல நடந்து விட்டது. அண்ணுத்துரை தந்திரமாகப் பேசி, ஆச்சாரியாரை இப்படிப் பேசச் சொல்லியதாக எண்ணினுலும் எண்ணிக்கொள்

(4-ம் பக்கம் பார்க்க)

கேரளத்தில் தி. மு. கழக முழக்கம்

என்.வி. நடராசன், கே.எச்.எம். சுபேர், கே.ஏ. கலையழகன், நாராயணன் கலந்துகொண்டனர்

மூணார், அக். 30—

27—10—57-ல், மூணார் தி.மு. கழகச் சார்பில், தோழர் கே. ஏ. கலையழகன் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் எம். இராமச்சந்திரன் மலையாளப் பாடல்கள் பாடினார்.

கேரள மாநில தி. மு. கழகச் செயலாளர் தோழர் சுபேர் மலையாள மொழியில் பேசுகையில், 'கேரளத்தார் — தமிழர் — ஆந்திரர்—கன்னடத்தார் ஆகிய நாம் அனைவரும் ஒரே இன மக்கள்; நாம் வடநாட்டுப் பிடியினின்று விடுதலை பெற்று நமக்குள்ள உரிமைகளையெல்லாம் பெற்று சுதந்தரமாக வாழ்ந்திட தி. மு. கழக வழியே சிறந்தது; ஆகவே கேரள மக்கள் தி. மு. கழகத்தில் பெருவாரியாகச் சேர்ந்து ஆதரிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து உடுமலை தோழர் நாராயணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கட்டாயமாக இந்தியைத் திணிக்கும் முயற்சி வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியேயாகும். மாற்றுக் கட்சியினர் கூறுவதுபோல் இது ஒரு சாதாரண மொழிப் பிரச்சினையல்ல; இது ஓர் அரசியல் பிரச்சினை! இம்முறையில் திணிக்கப்படும் இந்தியை நாம்—நான்கு மொழி மக்களும் கட்டுப்பாட்டுடன் எதிர்க்க வேண்டும். அதற்குரிய வழி தி. மு. கழகம்தான். நாமெல்லாம் சுதந்தர—சமதர்ம—குடியரசு மக்களாக வாழ வேண்டுமானால் 'திராவிடநாடு திராவிடருக்கே' ஆக வேண்டும். அப்படியாக கேரள மக்கள் தி. மு. கழகத்தில் சேர வேண்டும்."

பின்னர் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அரசியல் — பொருளாதாரம் —சமுதாயம் ஆகிய துறைகளில் திராவிட மக்கள் விடுதலை பெற்று வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பினின்று வெளியேறி சுதந்தர மக்களாய் உரிமை பல பெற்று வாழ வேண்டும்; கேரளத்தில் கொண்டுவந்திருக்கும் கல்விச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற டெல்லியின் அனுமதி வேண்டியிருக்கிறது. டெல்லி ஏற்க மறுத்தால் கல்விச் சட்டம் கேரள சர்க்காரால் அமுல் நடத்தப்பட முடியாது. இதுபோல், தமிழக அரசு, ஆந்திர அரசு, கர்நாடக அரசு ஆகிய அரசுகளெல்லாம் டெல்லியின் உத்தரவுக்கு அடிபணிந்துதான் நடக்க வேண்டிய நிலையில் இன்றைய இந்திய அரசியல் சட்டம் இருக்கிறது. இந்தப் பிடியினின்றும் நான்கு மொழி மக்களும் விடுபட்டு, இனவழி ஒன்றுபட்டு வாழ்ந்தாலன்றி உரிமை பலவற்றுடன் நாம் உலவ முடியாது.

"எம்முறையில் பார்த்தாலும் வடவர்கள், திராவிட மக்களின் நடை-உடை பாவனைகளில் வேறுபட்டவர்கள்; கலை-கலாச்சாரம் ஆகியவற்றில் மாறுபட்டவர்கள்.

"நிரந்தரமாக நம்மை அடிமைப்படுத்தி வைக்கவே வடநாட்டு ஏகாதிபத்தியம் இந்தி மொழியைக் கட்டாயமாகத் திராவிட மக்கள்மீது திணிக்க முயற்சிக்கிறது. ஆகவே, கேரளத்தாரே—திராவிட மக்காள்! நீங்களெல்லாம் தி. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்."

தலைவர் முடிவுரையில், '1937-ல் கட்டாயமாக இந்தியைத் திணிக்க முயற்சித்த இராசகோபாலாச்சாரியார் கூட இப்பொழுது எதிர்க்கிறார் — 'தென்னாட்டை நிரந்தரமாக அடிமைப்படுத்த வடநாட்டாரின் சூழ்ச்சி' என்று பகிரங்கமாகக் கூறுகிறார் என்றும் ஆகவே, இந்தியைத் திணிக்க முயற்சி எடுக்கப்படுமேயானால் நம்முடைய பலமான எதிர்ப்பைச் சமாளிக்க இந்திய சர்க்காருக்கு சக்தியில்லை என்றும், தேவிகுளம் — பீர்மேடு பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கென தி. மு. கழகச் சார்பில் தொழிற்சங்கம் விரைவில் அமைக்கப்படுமென்றும் குறிப்பிட்டார்.

சில தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் செயலாளர் எம். பி. ஜான் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

பேராசிரியர்

சுந்தரம் பிள்ளை

நினைவு மலர் வெளியீட்டு விழா

சென்னை, அக். 30—

பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு விழா, நேற்று மாலை இராஜாஜி மண்டபத்தில், முதலமைச்சர் காமராசர் தலைமையில் நடைபெற்றது; நிதியமைச்சர் சுப்பிரமணியம் நினைவுமலரை வெளியிட்டார்.

திரு. கே. கோதண்டபாணி பிள்ளை அனைவரையும் வரவேற்றார்.

பேராசிரியர்கள் ரா. பி. சேதுப் பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மு. வரதராசனார், மேரி மாசிலாமணி அம்மையார், டி.கே.சண்முகம் ஆகியோர் சுந்தரம் பிள்ளையின் இலக்கியத் தொண்டு குறித்துப் பாராட்டிப் பேசினர்.

திருவாரூர் நகர தி. மு. கழகம்

உறுப்பினர் கூட்ட முடிவுகள்

21—10—57 மாலை 5-30 மணிக்கு, திருவாரூர், விசயபுரம் கருணாநிதி அச்சக மாடியில் நகர தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ., அவர்கள் தலைமையிலும், திருச்சி மாவட்டச் செயலாளர், அன்பில்-தர்மலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

தீர்மானங்கள்

திருவாரூரில் மாவட்ட தி. மு. கழக மாநாட்டை நடத்திக்கொள்ள அனுமதி தந்தமைக்கு இக்குழு மாவட்டக் குழுவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நகரக் கிளைக் கழகத்திற்கு ஒரு மனையைச் சொந்தமாக வாங்குவதென்றும், அதற்குரிய கிரயத்தை தோழர் மு. கருணாநிதி அவர்கள் தருவதாக வாக்களித்ததின் பேரில், தற்சமயம் அந்த மனையைக் கழகச் செயலாளர் நாகப்பன் அவர்கள் தனது சொந்தப் பணத்தைக்கொண்டு தன் பெயருக்கு வாங்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதென்றும், அதன் பிறகு மேற்படி மனையை, செயலாளர் நாகப்பன் அவர்கள் மேற்படி தொகையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு கழகத்திற்குச் 'சாசனம்' செய்து கொடுத்து விடுவதாக ஒப்புகொண்டபடி சாசனம் செய்து கொள்வதென்றும் இக்குழு தீர்மானிப்பதுடன், கழகத்திற்கு இவ்வுதவிகள் செய்ய முன்வந்த தோழர் நாகப்பன் அவர்கட்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

'பஞ்சாயத்து யூனியன் அமைப்பு விவேகமற்றது—தேவையற்றது'

கே. சந்தானம் கருத்து

தஞ்சை, அக். 30—

"பஞ்சாயத்து யூனியன்கள் அமைப்பது விவேகமானதாகவோ, அவசியமானதாகவோ தோன்றவில்லை; ஏனெனில், மருத்துவ வசதி தருவது, கல்வி அளிப்பது போன்ற வேலைகள் எல்லாம், சர்க்காரே ஏற்று நடத்த வேண்டிய வேலைகளாகிவிட்டபடியால், எந்த ஸ்தலஸ்தாபனங்களிடமும் அவற்றை ஒப்புவிப்பதற்கு இல்லை. மாவட்டக் கழகங்களை ஒழிப்பதற்கு எவை எவை காரணமாக இருந்தனவோ அந்தக் குறைபாடுகளும், தடைகளும் இந்தப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், கவுன்சில்களுக்கும் இருக்கும்"

என்பதாக, நிதிக் கமிஷன் தலைவராக இருந்த கே. சந்தானம், தஞ்சை மாவட்டக் கழகம் தனக்குத் தந்த வரவேற்பின்போது பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், மாவட்டக் கழகங்களை ஒழிப்பது அவசியமான ஒரு சீர்திருத்தம்தான் என்று கருத்தறிவித்திருக்கிறார்.

"குறைந்தபட்ச சமூகத் தேவைகளைத் தர விரும்பிய பிரிட்டிஷார், கல்வி, சுகாதாரம், சாலைப் போக்குவரத்து வசதி முதலிய வேலைகளைச் செய்ய இந்த மாவட்ட ஆட்சி மன்றங்களை நிறுவினர்; காலப்போக்கில், சுதந்தர ஆட்சி வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டபின், மாவட்டக் கழகங்களின் வேலைகள் படிப்படியாக மாநில ஆட்சியாலும், கீழிருந்த பஞ்சாயத்துக்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டன. இதன் விளைவாக, மாவட்டக் கழகங்களுக்கு எந்தவிதக் குறிப்பிட்ட வேலைகளும் இல்லாமற் போய்விட்டன; எனவேதான், இவை இருக்கத் தேவை இல்லை எனப் பல ஆண்டுக் காலமாக நான் கூறிவந்திருக்கிறேன்; எனவே, இப்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை சரியான திசையிலேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதுகிறேன்" என்றும் தோழர் கே. சந்தானம் அவர்கள் கூறியிருக்கிறார்.

பம்பாய் மாதுங்கா தி. மு. க. செயற்குழு

23—10—57 மாலை 6 மணிக்கு பம்பாய் மாதுங்கா தி. மு. க. உறுப்பினர் கூட்டம், தோழர் கே. வி. நாதன் தலைமையில் நடைபெற்றபோது, சென்ற ஆண்டு வரவு—செலவுக் கணக்குகள், முன்னாள் செயலாளர் பிச்சையா அவர்களால் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் தோழர்கள் சுப்பிரமணியம், சபாபதி ஆகியோர் கழக வளர்ச்சிபற்றி உரையாற்றினர். தோழர் லாசஸ் வரவு—செலவுக்கான திருத்தத்தைக் கொண்டுவந்தார்; அதை ஆமோதித்துப் பல தோழர்கள் பேசினர்.

பெட்டக நன்கொடை

சென்னை, மணவழகர் மன்றத்தின் திரு. வி. க. நூல் நிலையத்திற்கு 25—10—57-ல் நூறு ரூபாய் மதிப்புள்ள ஒரு அழகிய பெட்டகம் தோழர் கண்ணதாசன் அவர்களால் நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டது.

இதுவரை சுமார் 350 நூல்களை பல அறிஞர்கள் தந்து உதவி உள்ளனர்.

திட்டத்தை வெட்டுவதா?

டெல்லியின் 'கையறுநிலை'

புதுடில்லி; அக். 30—

இரண்டாம் திட்டத்தைத் திருத்தி அமைப்பது அல்லது வெட்டுவது பற்றி, டெல்லிப் பெரியவர்கள் பெரும் கவலையுடன் ஆலோசித்துவருகிறார்களாம்!

அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை தோன்றிய நாள் முதல் இதுகுறித்துச் சிந்திக்கப்பட்டது என்றாலும், நிதி மந்திரியின் 'யாசக யாத்திரை' முடிந்தபின், பலனைப் பார்த்துக்கொண்டு வெட்டு வேலையைத் துவங்கலாம் என்று திட்டக் குழுவினர் கருதிக் கொண்டிருந்தனராம்!

ஆனால் இப்போது, டி. டி. கே. வெறுங்கையுடன் திரும்பி விட்டார் என்பதால், பிரச்சினை மீண்டும் உள்ளத்தைக் குடைகிறதாம்!

திட்டத்தை நறுக்கென வெட்டிவிடுவதற்கும் இல்லையாம்; ஏனெனில், எல்லாம் பெரிய திட்டங்களுக்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு, அவற்றிற்குத் தேவைப்படும் இயந்திரச் சாதனங்கள் முதலியவற்றிற்கு வெளிநாடுகளில் 'ஆர்டர்' தந்தாயிற்று என்றும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்களாம்!

அன்னிய உதவி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய கிருஷ்ணமாச்சாரியாரின் அறிக்கை அவநம்பிக்கைப்படுவதற்கோ அல்லது நம்பிக்கைக் கொள்வதற்கோ உரியது அல்லவென்றும், திட்டத்தை வெட்டுவதற்கான காலம் நெருங்கிவிட்டது என்றும் திட்டக் குழுவினர் கருதுகின்றனராம்!

கழகக் கூட்டத்தைத் தடுக்க முயற்சி

கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது

27—10—57-ல் திமிரி அடுத்த காவனூர் கிராமத்தில் தி. மு. கழகத் துவக்க விழாவும், இந்தி எதிர்ப்புக் கூட்டமும் நடைபெற்றது; அதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் காங்கிரஸ்காரர்கள்! தி. மு. க. தோழர்கள் பச்சையப்பன், சிரமன் ஆகியோரை பயமுறுத்திப் பார்த்து பயனில்லாமல் போகவே கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து பத்தடி தொலைவில் ஒலிபெருக்கி அமைத்து, தாரை, தம்பட்டை, வாணவெடிகளும் வைத்துக்கொண்டு கூட்டத்தை நடைபெறவிடாமல் தடுத்து நிறுத்துவதென்ற முடிவுடன் இருந்தார்கள்.

முன்கூட்டியே அங்கு சென்றிருந்த வேலூர் இளஞ்செழியன் அவர்கள், போலீஸ் அதிகாரிகளை அழைத்து, கூட்டத்தை நிறுத்த முயற்சித்துள்ள காங்கிரஸ்காரர்களை அப்புறபடுத்துமாறு கேட்டுக் கொண்டார். போலீஸ் அதிகாரிகள் முயற்சி வீணாயிற்று; பிறகு, தோழர் பச்சையப்பன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானதும் காங்கிரஸ் காலிகள் எதிர் முழக்கம் செய்து குழப்பம் விளைவித்தார்கள்.

தோழர் இளஞ்செழியன் அவர்கள், பத்தாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்களையும், இந்தி ஒழிப்பதன் அவசியத்தைப் பற்றியும் விளக்கிப் பேசினார்.

தோழர் இளஞ்செழியன் பேச்சைத் தடுக்க தாரை, தம்பட்டை வாணவெடி முதலியவைகளை உபயோகித்துக் காலித்தனம் செய்தனர்; மேடையின்மீது கற்களும் வீசப்பட்டன.

தோழர் இளஞ்செழியன் அவர்கள் பேசுவதை நிறுத்தி, சுமார் ஒரு பர்லாங்கு தூரம் தாண்டி ரோட்டுப் பாதை ஓரத்தில் கூட்டத்தைத் தொடர்ந்து அமைதியுடன் நடத்தினார்கள்.

பிறகு, தோழர் ஏ. கே. வில்வம், தி. மு. கழகத்தின் வளர்ச்சியையும், இலட்சியங்களையும் விளக்கிப் பேசினார்.

அடுத்து, தோழியர் அருண்மொழி அவர்கள் பேசியபின் கூட்டம் இனிது முடிவுற்றது.

மனித நோய்களைத் தீர்க்கப்

புதிய மருந்துகள்!

ரஷ்ய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்கள், சமீப மாதங்களில், 150-க்கு மேற்பட்ட புதிய மருந்துகளை உருவாக்கியுள்ளனவாம்!

மிகவும் கடுமையான நரம்பு வியாதிகளுக்கு 'அமினுசின்' என்ற புதிய மருந்து, மிகுந்த பலன் அளிக்கிறது; இத்தகைய வியாதிகள், முன்பெல்லாம் தீராத வியாதிகளாகக் கருதப்பட்டன.

இரத்தச் சோகையைப் போக்குவதற்கு விட்டமின் 'பி-12'-ன் கலவை ஒன்று, மிகுந்த பலன் தருவதாகஉள்ளது. பல ஆண்டுகள் வரை அபாயகரமான இரத்தச் சோகையால் அவதியுற்று வந்தவர் பலர் குணமடைந்துள்ளனர்.

ஒரு மூலிகையிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள 'கெலின்' என்ற புதிய மருந்து, 'ஆஸ்த்மா' நோய்க்கு சிறந்ததாக விளங்குகிறது.

'அல்கோலாயிட்' கோலோஹமின், என்ற மருந்து, சருமப் புற்று நோயைக் குணப்படுத்த உதவுகிறது.

நீரிழிவைப் போக்குவதற்கு வெளிநாடுகளில் உபயோகிக்கப்படும் 'கடிஜான்' என்ற மருந்தைவிட ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டுள்ள 'ரோஸ்டினன்' என்ற புதிய மருந்து மிகுந்த பலன் தருவதாயுள்ளது.

'ரேஸர்பின்' என்ற புதிய மருந்து இவ்வாண்டில் இரத்தக் கொதிப்பு நோயாளிக்குப் பயன்படும்.

இருதயம் சம்பந்தமான வியாதிகளுக்கும், கடுமையான இரத்தக் கொதிப்பிற்கும், இன்புளுயன்சாவிற்கும், இதர பல வியாதிகளுக்கும் சிகிச்சை அளிப்பதற்கான புதிய மருந்துகள் பலவும் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றனவாம்.

சைக்கிள் போட்டி

திருமங்கலம், அக். 25—

இராசா சைக்கிள் கம்பெனியார் நடத்திய 36 மைல்தூர சைக்கிள் ஓட்டும் போட்டியில் நகர தி. மு. க. தோழர் முத்தையா முதல் பரிசு பெற்றார். இந்தப் போட்டிப் பரிசளிப்பு விழாவுக்கு தோழர் எஸ். சதாசிவம் தலைமை வகித்தார். கழகச் செயலாளர் மன்னர் விழாவைத் துவக்கிவைத்தார்.

மறைவு

சென்னை 4-வது வட்ட நண்பர்கள் கழகத் துணைச் செயலாளர் தோழர் க. கோவிந்தன் தனது 25-வது வயதில் 30—10—57-ல் திடீரென இயற்கையெய்தினார்; அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கு, 4-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

சென்னை 37-வது வட்ட தி. மு. க. அனுதாபியும், கே. வி. கே. சாமி நினைவு மன்ற உறுப்பினருமான தோழர் கு. கணேசன் 28—10—57-ல் இயற்கையெய்திவிட்டார் என்ற செய்தியறிந்து மேற்படி மன்றம் வருத்தமுடன், தனது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

கூவம் ஆற்றோரக் குடிசைகளில் வாழும் மக்களுக்கு...

'வேறு குடியிருப்பு வசதி செய்து தருவீர்களா!'

அன்பழகன் கேள்வியும் அமைச்சர் பதிலும்

சென்னை, அக். 31—

'இந்த ஆண்டு சென்னை நகரத்தில் 16 சேரிகளை சீர்திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது; அதிகப்படியான மக்களுக்கு, உள்ள நிதி வசதியைக்கொண்டு அதிகப்படியான வசதி செய்து தருவதே நோக்கம்' என்று அமைச்சர் கூறினார்.

"கூவம் ஆற்றின் கரையோரமாக உள்ள குடிசைகளில் குடியிருக்கும் குடும்பங்கள்பற்றி திட்டம் தந்தால் கவனிக்கப்படும்"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் அவர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி தெரிவித்தார்.

நடமாடும் பல் வைத்திய விருந்தி

பூகோஸ்லேவியா நன்கொடையாக அளித்த நடமாடும் பல் வைத்திய வசதி நிரம்பிய வண்டியைச் சென்னை பயன்படுத்தி வருகிறது என்றும், தற்போது செங்கற்பட்டு மாவட்ட மக்கள் பயனடைந்து வருகின்றனர் என்றும் அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்தார்.

பெண்கள் இந்தி எதிர்ப்புக் கூட்டம்

3—11—57 மாலை 5 மணிக்கு, சென்னை 4-வது வட்ட இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில், மணிகண்ட முதலி 6-வது தெருவில் (இராபின்சன் பூங்கா எதிரில்) ஓர் இந்தி எதிர்ப்பு (பெண்கள்) கூட்டம் நடைபெறும். தலைவர் வெற்றிச்செல்வி-அன்பழகன்; பேசுவோர்: டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., மாணவி சற்குணம், பங்கயற்செல்வி, தேசியமணி-கண்ணன், ஜெகஜோதி-நாகராசன், கமலா-பாலசுந்தரம், திரிபுரசுந்தரி, வேதவல்லி, கலைச்செல்வி, கே. இராசம்.

டேப் - இராதாமாணிக்கம் இன்னிசை உண்டு.

சென்னை மாநில தேயிலைத் தோட்ட தொழிற் சங்கப் பொதுக்கூட்டம்

3—11—57 காலை 10-30 மணி அளவில் சென்னை மாநில தேயிலைத் தோட்டத் தொழிற் சங்கப் பொதுக்கூட்டம் ஹைவேவிஸ் குரூப் மணவார் டிவிஷனில் எம்.எஸ்.எஸ். ஸ்டோர் முன்பாக உள்ள திடலில் நடைபெறும்; தோழர் ஐசக் கங்காணி தலைமை வகிப்பார்; தோழர் ஜெபக்கனி கொடியேற்றுவார். தோழர்கள் கே. ஏ. கலையழகன், தம்பித்துரை, கே. எஸ். ஜேம்ஸ் ஆகியோர் பேசுவர். மாலை 3 மணிக்கு, பச்சைக் கூமாச்சி டிவிஷனில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

திண்டிவனம் இளங்கோ மாவு ஆலைத் திறப்புவிழா

அண்ணா திறந்து வைப்பார்

3—11—57 காலை 10 மணிக்கு திண்டிவனம்—மரக்காணம் சாலை 88-ம் எண்ணில் அமைக்கப்பட்டிருக்கும் இளங்கோ மாவு ஆலைத் திறப்பு விழா திரு. பி. வீரப்ப கவுண்டர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; அண்ணா அவர்கள் மாவு ஆலையைத் திறந்துவைப்பார்கள்.

மறைமலையடிகள் நினைவு விழா

3—11—57 மாலை 6-15 மணிக்கு நாகை தென்னிந்திய திருச்சபை உயர்நிலைப் பள்ளியருகிலுள்ள திடலில் நகர் மன்றத் தலைவர் ஏ. எம். பி. திருவம்பலம் (செட்டியார்) தலைமையில் மேற்படி விழா நடைபெறும். திரு. குன்றக்குடி அடிகளார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

3—11—57 மாலை 4 மணிக்கு நெல்லை நகர் 13-வது வட்ட திராவிட முற்போக்கு மன்றக் கட்டிடத்தில் தோழர் எம். மசுக்தான் தலைமையில் 'வடக்கும்-தெற்கும்' என்னும் பொருள் பற்றிப் பல தோழர்கள் பேசுவர்.

அண்ணா

சுற்றுப்பயணம்

நவம்பர் :

3 : திண்டிவனம்

5 : வாலாஜாபேட்டை (வ.ஆ.)

6 : சென்னை : ஆசாரங்க கலைக் கல்லூரி

கோபி நகர தி. மு. கழகச் செயற்குழுவினருக்கு :

3—11—57 காலை 10 மணியளவில் கோபி நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் கழக மனையில் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

சென்னை—42வது வட்ட தி.மு.க. கிளை—துணை அமைப்புத் தோழர்களுக்கு :

2—11—57 இரவு 9 மணிக்கு சென்னை 42-வது வட்ட தி.மு.க. கிளையின் பணிமனையில் (4, நமச்சிவாய முதலித் தெரு) செயலாளர் நீலநாராயணன் தலைமையில், மேற்படி வட்டக் கிளை, மற்றும் வட்டத்திலுள்ள துணை அமைப்புக்களின் கூட்டுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்கப்படும்.

அண்ணாமலை நகர் தி. மு. கழக—மாணவர் கிளைப் பொதுக்கூட்டம்

3—11—57 மாலை 5 மணிக்கு அண்ணாமலை நகர் திருவேட்களம் குளக்கரையில் தோழர் கணபதி ராமசுப்பையா தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன், பொன்-சொக்கலிங்கம், டி. கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்; (தோழர் கே. ஏ. மதியழகன் ஆங்கிலத்தில் பேசுவார்.)

தூத்துக்குடி நகர தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு :

"3—11—57 காலை 10 மணிக்கு வடக்கூர் உடற்பயிற்சிக்கூடத்தில் தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டமும், மாலை 4 மணியளவில் மில் தொழிலாளத் தோழர்கள் கூட்டமும் நடைபெறும்" என்று தூத்துக்குடி நகரச் செயலாளர் ஜோசப் அறிவிக்கிறார்.

திருக்கோயிலூர் தி. மு. க. செயற்குழுவினர்கட்கு :

3—11—57 இரவு 8 மணிக்கு ஜில்லாபோர்டு சத்திரத்தில் தோழர் வே. தென்றல்மணி தலைமையில் திருக்கோயிலூர் (தெ. ஆ.) தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சிவகாசி நகர தி. மு. க. செயற்குழுவினர்கட்கு :

3—11—57 மாலை 4 மணிக்கு சிவகாசி—சாத்தூர் ரோடிலுள்ள கே. வி. கே. சாமி படிப்பகத்தில் சிவகாசி நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

வல்லம்படுகை :

ரைஸ்மில் அருகில்

3—11—57 மாலை 3 மணிக்கு

தலைவர் : கு. அரங்கநாதன்

பேசுவோர் :

மு. கருணாநிதி எம் எல்.ஏ.

கே. ஏ. மதியழகன்

தில்லை-வில்லாளன்

இரே. பாலகுருசாமி

★

ஆதிவராகநத்தம் :

கே. வி. கே. சாமி திடலில்

3—11—57 இரவு 7 மணிக்கு

தலைவர் : வி. வி. சாமிநாதன்

பேசுவோர் :

மு. கருணாநிதி எம்.எல்.ஏ.

கே. ஏ. மதியழகன்

தில்லை-வில்லாளன்

★

வலங்கைமான் :

அரங்கண்ணல் அரங்கில்

(சேணியர் தெரு)

3—11—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : எஸ். அசன்முகம்மது

பேசுவோர் :

கண்ணதாசன்

பி. கே. ஈ. அப்துல்லா

எஸ். ஆர். இராதா

(மாலை 5-30 மணிக்கு ஊர்வலம் உண்டு.)

★

தூத்துக்குடி :

சிவன் கோயில் திடலில்

3—11—57 இரவு 7 மணிக்கு

தலைவர் : உமையணன்

பேசுவோர் :

காஞ்சி-கல்யாணசுந்தரம்

எஸ். கணபதி

★

மேலப்பாளூர் :

(சேலம் மாவட்டம்)

3—11—57 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

டி. ஆர். சுப்பிரமணியம்

ஆ. திராவிடமணி

(மாலை 5-மணிக்கு ஊர்வலமும் சில பகுதிகளில் கொடியேற்று விழாவும் நடைபெறும்.

★

சேலம் :

(18-வது வட்டம்)

தி. மு. கழகக் கிளை ஆண்டு விழா

(சித்தேஸ்வரா அருகில்)

3—11—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : முத்துப்பழனி

பேசுவோர் :

ஆர். எஸ். பாண்டியன்

சிற்றுளி-சுப்பிரமணியம்

ஈ. ஆர். கிருஷ்ணன்

வி. சிவப்பிரகாசம்

கே. எஸ். மணி

எஸ். ஏ. அன்புக்கரசு

★

இராசிபாளையம் :

(கோவை மாவட்டம்)

திரு. வி. க. திடலில்

3—11—57 மாலை 5½ மணிக்கு

தலைவர் : செ. அருணாசலம்

பேசுவோர் :

மு. இராமநாதன்

கு. மா. சண்முகசுந்தரம்

சத்தியமூர்த்தி

இரா. தமிழ்ப்பித்தன்

இரா. ப. அய்யாசாமி

பெங்களூர்—இலட்சுமி நாராயணபுரம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

3—11—57 காலை 9½ மணிக்கு பெங்களூர் இலட்சுமிநாராயணபுரம் தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

நக்கீரர்பட்டி மன்றம்

2—11—57 மாலை 6½ மணிக்கு சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை முருகேச முதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் சி. எஸ். நடேசன் தலைமையில் தோழர்கள் இளமாறன், பெ. வெ. செங்குட்டுவன் ஆகியோர் 'மக்களும் மதங்களும்' என்பது பற்றிப் பேசுவர்.

அண்ணா கொள்கை விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுங்கள். வேறு எது வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள்.

"1,000 பேரைச் சிறையில் தள்ளியவர் என் மாறினார்? கிருத்துவக் கல்லூரியில் அவர் பேசுகையில், 'மனிதன், தன் தவறை உணர்ந்து திருத்திக்கொள்ளக் கூட உரிமையில்லையா?' என்று கேட்கிறார். அதே முறையில் தான், இன்று, யார் யார் சுயநலத்துக்காக நம் கருத்தை ஐயப்பாட்டுடன்—அச்சத்தோடு கவனிக்கிறார்களோ, அவர்களெல்லாம் நம்முடன் நெருங்கிவரப் போகிறார்கள். அதற்கு நம்மிடம் கட்டுப்பாட்டு உணர்ச்சி வேண்டும்.

"ரஷ்யா, செயற்கைச் சந்திரனை பூமியிலிருந்து 560-வது மைலில் மணிக்கு 18,000 மைல் வேகத்தில் பறக்கவிடுகிறது—என்ற செய்தியை இந்த நாட்டுப் பத்திரிகையில் படிக்கிறோம். அதே நேரத்தில், அதே பத்திரிகையில் வேறொரு பக்கத்தில், 'மழையைத் தருவிப்பதற்காக மதுரைக்குப் பக்கத்திலே யாகம் நடத்தினார்கள்; அதற்கு ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. தலைமை தாங்கினார்' என்ற செய்தியையும் பார்க்கிறோம்.

"இந்த இரு செய்திகளும் ஒரு சேர இருக்கும்வரை நாம் வெற்றி பெறமுடியாது. நாம் பெற்றிருக்கிற தெளிவு, இந்த நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் ஏற்படவேண்டும். வடநாட்டுத் துரைத்தனம் எந்தெந்த வகையிலே நம் நாட்டைச் சீர்குலைக்கிறது என்பதை எடுத்து விளக்க வேண்டும்.

"நமக்குத் தமிழ் உணர்ச்சி தான் அதிகமாக இருக்கிறது என்பதை அறிந்து, அதை அழித்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தியைத் துரைத்தனமொழியாக இருக்கச் செய்துவிட்டால் தமிழ் உணர்ச்சி துவண்டுவிடும் என்று கருதி முயற்சிகள் செய்துவருகிறார்கள்; 'உங்கள் தமிழ் மொழி உங்கள் வீட்டோடு இருக்கட்டும்; கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் அது பயன்பட்டால் போதும்' என்று கூறிவருகிறார்கள்.

"தமிழ் மொழிக்கு உள்ள உரிமை அறுபட்டால் பின்னர், நம் நாடு என்று ஒன்றைச் சுட்டிக்காட்ட தமிழர்களுக்குத் திராணியிருக்காது; 'என்னை அடக்கியாள நீ யார்' என்று கேட்கமுடியாது. அதன்பின் தனியரசு என்பதிலும் பொருளில்லை-கேட்கவும் திராணியில்லை என்று கருதிதான் தமிழை அழித்து இந்தியை நுழைக்க முயற்சிக்கிறார்கள்.

"இதைத் தவிர, இந்தியை நுழைப்பதற்கு வேறு காரணமில்லை. இந்தியில் வளமில்லை; அதில் இலக்கியமில்லை என்பதெல்லாம் வடநாட்டினருக்குத் தெரியாததல்ல; தெரிந்துதான் செய்கிறார்கள்.

"காங்கிரஸ்காரராக இருப்பவர்—காந்தி பக்தர்—காங்கிரஸ்காரர்களால் ஆஸ்தானக் கவியாக ஆக்கப்பட்டவர்—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளைகூட, 'தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்றுதான் பாடியிருக்கிறார்; 'இந்தியன் என்றொரு இனமுண்டு; அவர்களுக்கு ஏழெட்டுக் குணமுண்டு' என்று, பாடவில்லை.

"தனி இனம்—அந்த வாசகத்தைக் கவனிக்கவேண்டும். காங்கிரஸ்காரர்—கதர் போட்டுக் கொள்பவர் — சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர் அவரே இப்படிக் கூறியிருக்கிறார்-

"நான் கிராமப்புறங்களில் பேசும்போதெல்லாம் இங்கு நகரப் பகுதிகளில், பேசுவதைப் போல பக்ராநங்கலைப் பற்றியோ, இராகுட் அணைக்கட்டைப் பற்றியோ, சிந்திரி—சித்தரஞ்சன் தொழிற்சாலைகளைப் பற்றியோ புள்ளிவிவரம் காட்டிப் பேசுவதில்லை. இரண்டே இரண்டு சாரணங்களைத்தான் சொல்லுவேன். அதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டு நான் சொல்லும் கருத்தையும் வரவேற்பார்கள்.

"'வடக்கே தலைவைத்துப் படுக்காதே' என்று ஒரு பழமொழி உண்டு; இது, தி. மு. கழகம் தோன்றுவதற்கு முன்பே ஏற்பட்ட பழமொழி; எனவே, அந்தக் காலத்திலிருந்தே வடநாட்டு மீது தமிழருக்கு வெறுப்பு இருந்திருக்கிறது. வடக்கே நெடுநாளாக அக்கிரமக்காரர்கள் இருந்திருக்கின்றனர்; அதைத்தான் தி. மு. கழகம் சொல்லுகிறது—என்று நான் சொன்னால், கூட்டத்திலுள்ள தாய்மார்களும், கிழவர்களும் வாலிபர்களும் 'அப்படியா?' என ஆச்சரியப்படுகின்றனர்; இல்லையென்றால், இந்தப் பழமொழியின் உட்பொருள் என்ன? யாரோ அக்கிரமக்காரன் வடக்கிலிருந்து கொண்டு தமிழர்களை அடக்கப் பார்த்தான்; அதனால் ஏற்பட்டதுதான் இப்பழமொழி.

"மற்றொன்று: தமிழ் இலக்கியத்திலே, 'வடக்கிருத்தல்' என்று ஒன்றுண்டு; வாழ்க்கையிலே சலிப்பு ஏற்பட்டு உயிர் துறக்க எண்ணுபவர்கள் வடக்கு நோக்கி இருந்து பட்டினி கிடந்து சாவார்கள்; அதுதான் வடக்கிருத்தல்!

"எப்படிப் பட்டினிகிடந்து செத்த நமது முன்னோர்கள், வடக்கே பார்த்து உயிர்விட்டார்களோ, அதேபோல் நாம் இன்று சோறு—மானம்—அரசியல் — பொருளாதாரம், மற்றும் எல்லாத் துறைகளிலும் வடக்கே பார்த்து வாழ வேண்டியுள்ளது. வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று சொன்னால், அதை கிராம மக்கள் நன்றாகப் புரிந்துகொள்கிறார்கள்.

"வடநாட்டிற்கும் — தென்னாட்டுக்குமிடையே பலாத்காரப் போராட்டத்தைத் துவக்கி, ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டும், வெட்டிக் கொண்டும் கிளர்ச்சி நடத்தக் கூடிய கேடுகெட்ட முறையில் தி. மு. கழகம் இல்லை; அப்படிப்பட்ட கோரங்களில்—கொடுமைகளில் தி. மு. கழகம் ஈடுபடாது. அத்தகைய அநாகரிக அரசியலை தி. மு. கழகம் என்றும் நடத்தாது."

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும், மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அமெரிக்காவிற்குச் சென்று வெறுங்கையுடன் திரும்பியது குறித்தும் குறிப்பிட்டார்.

இரங்கற் கூட்டம்

சென்னை 23-வது வட்டத் தி. மு. கழக உறுப்பினரும், மும்முனைப் போராட்டத்திலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து சிறைசென்றவருமான தோழர் க. சுந்தரனார் இயற்கை எய்தியதை முன்னிட்டு 3—11—57 காலை 10 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் கே. பழம்நீ தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.